புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
SACRED HEART RESEARCH PUBLICATIONS
ISSN: 2456-821X Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023 June-2023

# ஆய்வு வரலாற்றில் சீவக சிந்தாமணி

முனைவர் அ. சண்முகம்
தமிழ்த்துறைத் தலைவர்
தொன் போஸ்கோ கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கீழ்ப்பாக்கம், சென்னை – 600010

ஆய்வுச் சுருக்கம்

சீவக சிந்தாமணியின் ஆசிரியர் திருத்தக்கதேவர், சமண சமயத்தைச் சார்ந்தவர் என்று கருதுமிடத்தில் சமண சமயச் செல்வாக்கால் சீவக சிந்தாமணி ஒருவேளை சிறந்திருந்தாலும் இன்று சமண சமயத்தின் வலிமை குன்றிய நிலையிலும் சமண சமய நூலாகக் கருதக்கூடிய சீவக சிந்தாமணி இன்றும் நின்று நிலவுவதற்கு காரணம் அவ்விலக்கியத்தின் சுவை, எடுத்துரைகின்ற கருத்துக்களுமாகும். அந்த வகையில் சீவக சிந்தாமணிக்கு உ.வே.சா அவர்களின் முழுமையான பதிப்பாக 1887-இல் வெளிவந்ததிலிருந்து அந்நூல் தொடர்பாக தொடர்ந்து நிகழ்த்தப்பட்ட விவாதங்களையும் ஆய்வுகளையும் எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

## முன்னுரை

ஒரு பண்பட்ட சமூகத்தில் ஓர் இலக்கியத்தின் வாழ்வு என்பது அவ்விலக்கியம் எடுத்துரைக்கின்ற விழுமியக் கருத்தியல்களுக்கு உட்பட்டதாகும். மேலும் அக்கருத்தியல்களினை பல்வேறு மாறுதல்களுக்குட்பட்ட சமூகத்தினரும் பின்பற்றுவதும் விதந்தோதுவதுமான செயல்களினால் ஒரு இலக்கியம் பெருஞ்செல்வாக்குப் பெற்றோ அல்லது அழிவுகளுக்கு உட்படாமலோ வாழ்ந்து கொண்டிருக்கும். இவ்வாறு சமூகம் சார்ந்த விழுமியக் கருத்தியல்களை கொண்டிராமலும் பின்னர் தோன்றும் சமூகத்தினருக்கு பயன்படாத கருத்துக்களுடன் ஒரு படைப்பானது கொண்டிருந்தால் அவ்விலக்கியத்தின் செல்வாக்கு என்பது தொடர்ந்து நிலைபெறாமல் கேட்பாரற்று அழிதலுக்குட்பட்டு விடும் என்பது உலகியல் உண்மையாகும்.

சீவக சிந்தாமணி தோன்றிய காலம் முதல் இன்று வரை தமிழ் வழங்கும் நிலங்களில் எண்ணற்ற மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. அம்மாறுதல்கள் என்பது இயற்கை, பண்பாடு, மொழியியல், அரசியல் மற்றும் சமயம் சார்ந்ததாகவும் இருந்திருக்கின்றன. இவ்வாறு இயற்கையாகவும் செயற்கையாகவும் ஏற்பட்ட இடையூறுகளைத் தாண்டி இன்றும் சீவக சிந்தாமணி நிலைபெற்று இருப்பதற்கு காரணம் அதன் இலக்கியத் தரமும் அந்நூல் தமிழ்ச் சமூகத்திற்கு ஏற்ற அறக்கருத்துக்களை எடுத்துரைப்பதுமேயாகும்.

சங்க காலம் முதலே பல்வேறு சமயங்கள் வழக்கிலிருந்தன. வைதீகச் சமயங்கள் கி.பி.7ஆம் நூற்றாண்டு முதல் மறுமலர்ச்சியடைந்து பெருவளர்ச்சி அடைந்தன. அவ்வளர்ச்சியானது சமயம் சார்ந்தும், இலக்கியஞ்சார்ந்தும், சமூகம் சார்ந்தும் பல்கிப் பெருகின. குறிப்பாக சைவர்களும் வைணவர்களும் சமூகத்தின் பல நிலையில் பல்வேறு பாடல்களை இசையோடு பாடி சமயங்களை வளர்த்தனர். இந்நிலையில் சமணமும் பௌத்தமும் வீழ்ச்சி அடையத் தொடங்கின. இந்தக் காலத்தில் கி.பி. 9ஆம் நூற்றாண்டளவில் திருத்தக்கதேவர் தம் சமயம் சார்ந்து காப்பியத்தினை புனைந்துள்ளார். அதற்கு முன்னர் வரையிலும் தமிழ் மரபுக் கதைகள் மூலமே சமயம் சார்ந்த தத்துவங்களை விளக்கிய நிலை மாறி, வடநாட்டுக் கதைகளும் தமிழகத்தில் ஓரளவு அறிமுகமாகியிருந்தன. அந்த வகையில் முதலில் பெருங்கதையினை கொங்குவேளிர் அறிமுகப்படுத்தியுள்ளார். அதனைத் தொடர்ந்து சீவகனின் வாழ்வியல் பற்றிய

வரலாற்றுக் கதைகதையைக் கொண்டு தமிழ் இலக்கிய மரபுகளையும் வடமொழி இலக்கியக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு திருத்தக்கதேவர் சீவக சிந்தாமணியைப் படைத்துள்ளார்.

சீவக சிந்தாமணி நூல் தோன்றியது முதல் நூலாசிரியரின் கவித்திறனால் அந்நூல் சமணர்கள் மட்டுமல்லாது பிற சமயத்தார்களும் விரும்பிக் கற்கவும் அதன் இலக்கியச் சுவையினை நுகரவும் செய்தனர். அதனடிப்படையில் சிந்தாமணிக்கு இதுவரையிலும் பல்வேறு கோணங்களில் ஆய்வு நிகழ்த்தப்பட்டுள்ளன. அவற்றுள் பெரும்பாலான ஆய்வுகள் சிந்தாமணியின் வர்ணனைகள், சிறப்புகள், மொழிநடை, பாத்திரப் படைப்புகள், துறவுகள் குறித்ததுமாகவே நடந்திருக்கின்றன.

சமணப் பெருங்காப்பியங்களான பெருங்கதை, சீவக சிந்தாமணி, சூளாமணி ஆகிய மூன்று காப்பியங்களைக் காணும்போது சமண சமயத்தின் பொதுமையானப் போக்குகளை, *“சூளாமணி, சிந்தாமணி ஆகிய நூல்களின் மூலம் தர்மத்திற்கெதிரான பகை அரசனை வென்று நல்லரசை அமைத்துவிட்டு, மகன் உரிய வயது அடையும் போது அவனிடம் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைத்துவிட்டு தந்தை அல்லது தாத்தா துறவு மேற்கொள்ளும் செயலையே பொதுவான காப்பியச் செயலாகக் காண்கிறோம். பெருங்கதையில் மன்னன் உதயணனும் இவ்வாறே இறுதியில் நரவாண தத்தனிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டுத் துறவு மேற்கொண்டானா? அல்லது இல்லையா? (தமிழில் காப்பியக் கொள்கை முதல் பகுதி 1985 ப. 227)* என்று து.சீனிச்சாமி குறிப்பிடுகிறார்.

அவரே பின்னர் தோன்றிய உதயணகுமார காவியம் கதையினை நோக்கும்போது பெருங்கதையில் உள்ள தலைவனான உதயணனின் வாழ்வும் இவ்வாறுதான் இருக்கும் என்பதை எடுத்துரைக்கிறார்.

திருத்தக்கதேவர் வடநிலக் கதையைக் கையாள்வதில் கொங்குவேளிருக்கு அடுத்த நிலையில் காப்பியம் புனைகின்றார். தாம் காப்பியம் புனைவதற்கான கதையும் விருத்தப்பாவையும் தமிழ் மரபுக்கேற்ப முதன்முதலாக காப்பியம் படைக்கிறார். இதனை,

*"சங்க காலத்திற்குப்பின் தமிழ் யாப்பிலக்கணத்தில் பெரிய மாறுதல் ஏற்பட்டது. இசையோடு பாடப்படும் பல்வகைப் பாடல்கள் தோன்றியன. சிலப்பதிகாரத்தில் இக்காலத்தில் தோன்றிய இசைப் பாடல்களைக் காணலாம். இவற்றோடு வடமொழி விருத்தப்பா வகையும் தமிழில் மொழியாப்பும் கலந்து புது வகையாகப் பாக்கள் அமைந்தன. இக்காலத்தில் தான் திருத்தக்கதேவர் காப்பியம் இயற்றினார்" (1975- இலக்கியவானில் சிந்தாமணி பக்.66)* என்ற கூற்றினை கொண்டு நோக்கும்போது முற்கூறியது போல திருத்தக்கதேவர் வடநிலக் கதையையும் பாவையும் எடுத்துக்கொண்டு தமிழ் மரபையும் தமிழ் யாப்பையும் கொண்டு புதியதாகக் காப்பியம் புனைந்துள்ளார்.

காப்பியம் தொடங்குகின்ற முறையில் திருத்தக்கதேவர் சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் பின்பற்றாமல் தனக்கென்று புது வழியினை வகுத்துக் கொண்டார். அவையாவன, கடவுளை வணங்கி, அவரிடம் கூறி, நாட்டுவளம், நகர்வளம், தலைவன் பிறப்புப் பற்றி கூறி கதையினை தொடங்குகின்றார். சீவக சிந்தாமணியினைப் பிற்காலத்தில் தோன்றிய பிற காப்பியங்களும் காப்பியத்திற்கென்று இலக்கணம் கூறிய தண்டியலங்காரம் திருத்தக்கதேவர் கூறிய காப்பியத்தின் இலக்கணங்களை கூறுகின்றது. இதனை, "இக்காப்பியம் தோன்றிய பின் தோன்றிய தண்டியலங்காரம் கூறும் காப்பிய இலக்கணம், பல காப்பியங்களின் அமைப்பைக் கண்டு கூறியதேயாகும். அவ்வாறு அந்நூல் இலக்கணம் கூறச் சிந்தாமணியும் துணை செய்திருக்கக் கூடும். இலம்பகம் என்ற பிரிவு சிந்தாமணியில் மட்டுமே காணப்படுவது இதற்குச் சான்றாக அமையும்" (பக். 15, 1975: இலக்கிய வானில் சிந்தாமணி) என்ற நூலில் மு. வை. அரவிந்தன் கூறுவதிலிருந்து திருத்தக்கதேவர் தான் ஒரு முன்னோடியாக இருந்து தனக்குப் பின்னர் வருகின்ற புலவர்களுக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாக செயல்பட்டு இருக்கின்றார். இவ்வாறு காப்பியத் தொடக்கத்தினைக் கூறிய திருத்தக்கதேவர் சச்சந்தனின் வீழ்ச்சியை முதலில் குறிப்பிட்டு அதற்கான காரணங்களாக சச்சந்தனனின் காம வேட்கையும், கட்டியங்காரன் என்ற அமைச்சரின் துரோகமும் அத்துரோக மனப்பான்மை உள்ள அமைச்சன், பொறுப்பற்ற புலவர்களின் சொல்கேளா காமவேட்கையில் ஆழ்ந்த மன்னனை அழிக்கிறான் எனவே தீய எண்ணம் கொண்ட அமைச்சரையும் பொறுப்பற்ற மன்னனையும் வீழ்த்தவேண்டும்

இவ்விரண்டுமே நூலாசிரியரின் நோக்கமாகும் இதனைச் செயல்படுத்தும் நோக்கில் பல விதமான முன்னெடுப்புகளை கையாள்வார்.

திருத்தக்கதேவர் காப்பியத் தலைவனான சீவகனை உலகியலில் ஈடுபட்டு பலவிதமான அறம்சார்ந்த அனுபவங்களினூடாக வெற்றியையும் பெற்று மக்களுக்கு நல்லரசினை வழங்கிவிட்டு, உலகியலின் வேட்கைகளிலிருந்து விடுபட்டு இறுதியில் துறவு நிலையை ஏற்கும் தன்மையில் உருவாக்கியிருக்கிறார். சீவகன் தனக்கு பகைவனாகிய கட்டியங்காரனை அழிப்பதோடு மட்டுமல்லாமல் காம வேட்கையையும் கைவிட்டுத் துறவு மேற்கொள்ளல் என்பனவும் காப்பியச் செயல்களில் முக்கிய செயல்களாக அமைகின்றன. சீவக சிந்தாமணியில் கட்டியங்காரனை அழித்தலும், காம வேட்கையை அழித்தலும் சம இடத்தைப் பெறுகின்றன.

உலகியலில் கிடைக்கும் வெற்றி, உலகியலில் இருந்து விடுபடல் என்ற இரண்டையும் இணைவு செய்து பார்க்காவிட்டால் சீவக சிந்தாமணி என்னும் காப்பிய வடிவின் முழுமை கிடைக்காமல் போய்விடும்.

பாத்திரப் படைப்பும் நாடகப் பாங்கும்

சீவகன் என்ற காப்பியத்தலைவனின் ஆட்சியை,

"திருமகள் அருளைப் பெற்றுத் திருநிலத் துறையும் மாந்தர்
ஒருவனுக்குக் கொருத்தி போல உளமகிழ்ந்து ஒளியின் வைகிப்
பருவரு பகையும் நோயும் பசியும் கெட்டோழிய" (சீவக .2377:1-3)

என்ற தன்மையில் அரசாண்டான் என்றும், குறிப்பாக சீவகனின் பண்புகளை தன்னேரில்லாத் தலைவனாகக் காட்டும் பொருட்டு,

"அருள்வலி ஆண்மை கல்விஅழகு அறிவு இளமை ஊக்கம்
திருமலி ஈகை போகம் திண்புகழ் நண்பு சுற்றம்
ஒருவர் இவ்வுலகில் யாரே சீவகன் ஒக்குநீரார்" (சீவக. 1165:1-3)

என்றும் இவை மட்டுமல்லாது சீவகன் கலைகளிலும் படைத்திறத்திலும் இசையிலும் இவனைத் தவிர உலகில் வேறு இவனுக்கு ஒப்பானவர் இல்லை என்ற தன்மையில் சீவகன் என்ற கதாபாத்திரத்தைப் படைத்திருப்பார்.

சிந்தாமணியில் கதாபாத்திரங்கள் ஒன்றோடு ஒன்று தொடர்ந்து இயங்கும் நிலையில் பல இடங்களில் நாடகப் பாங்கு வெளிப்படுகின்றது. அவற்றில், ஒன்றான சீவகன் விசயை சந்திப்பு நிகழ்வினைக் கூறும் திருத்தக்கத்தேவர் விசையை இருக்கும் தவப்பள்ளி அடைந்து சீவகன் பதுமுகனை அனுப்பி செவ்வி பார்த்துவரச் சொல்கின்றான். விசையையும் சீவகனையே எதிர்பார்த்திருப்பவளாக காட்டுகிறார். காலையிலே கனவு கண்டேன், கண் துடிக்கிறது, பல்லியும் ஒலிக்கிறது, நம்பி வருவானோ? என்று சொல்லிக் கொண்டிருக்கும் வேளையில் அங்குச் சென்ற பதுமுகன் விசையையினை அடிபணிந்து நம்பி வந்தான் என்கிறான். அவள் எங்கே? என விசையை கேட்டபோதே சீவகன் தன் தாயின் காலடியில் விழுந்து வணங்குகிறான். இந்நிகழ்வினை கூற,

"எல்லிருட் கனவிற் கண்டேன் கண்இடன் ஆடும் இன்னே
நல்அடி பணிந்து நம்பி வந்தனன் அடிகள் என்றான்" சீவக. (1909:1-4)

என்று பதுமுகன் விசையை உரையாடலையும் இதனைத் தொடர்ந்து சீவகன் தன் தாயின் காலடியில் விழுந்து வணங்கியதையும் அவர்கள் இருவரும் இணைந்ததையும் இரு கடல் ஒன்றாக இணைந்ததாக திருத்தக்கதேவர் உவமிக்கிறார் அவை,

"தங்கு ஒளி தடகை கூப்பி தொழுது அடி தழுவி விழுந்தான்
அங்கு இரண்டு அற்பு முன் நீர் அலை கடல் கலந்தது ஒத்தார்"(சீவக.1910:3-4)

தொடர்ந்து விசையை கண்ணீர் மல்க,

"------------- --------------- --------- வனமுலை பொழிந்த தீம்பால்
முருகு உடை மார்பின் பாய்ந்து முழுமையும் நனைப்ப மாதர்
வருக என் களிறு என்று ஏத்தி வாங்குபு தழுவிக் கொண்டாள்" (சீவக. 1911:2-4)

விசையை தன் மகனை பிறந்தது முதல் அதன் காரணத்தால் தாய்மை உணர்வு மிகுந்து தன் மார்பில் பால் பிலிற்ற சீவகனை மார்போடு தழுவிக் கொண்டு 'என் களிறே வா' என அக மகிழ்வோடு தழுவுகிறாள். மேலும் விசையையின் கூற்றாக,

"வாள் திறள் குருசில் தன்னை வாள் அமரகத்துள் நீத்து

*காட்டகத்து உம்மை நீத்த கயத்தியேன் காண வந்தீர்" (சீவக. 1913:1-2)*

திருத்தக்கதேவர் திசையை கூற்றாக உன் தந்தையை போர்க்களத்திலே விட்டுவிட்டு, உன்னைச் சுடுகாட்டிலே விட்டுவிட்டு வந்த கயத்தியைக் காண வந்தாயே என்று ஒரு தாயின் உரையாடலை மடை உடைந்த வெள்ளம் போல் உணர்ச்சி மிகுந்த தன்மையில் படைத்திருக்கின்றார்.

து. சீனிச்சாமி அவர்கள் தமிழில் காப்பியக் கொள்கை என்ற நூலில் கூறும்போது சீவக சிந்தாமணி என்ற காப்பியத்தை ஒத்த சமயம் சார்ந்த காப்பியமான இதற்கு முன்பு தோன்றிய பெருங்கதையையும் பின்பு தோன்றிய சூளாமணி என்ற காப்பியத்தையும் கொண்டு மூன்றும் சமண சமய காப்பியங்களைத் தாண்டி மூன்றிற்கும் உள்ள பல ஒப்புமையை மனதில்கொண்டு ஒப்பீட்டாய்வை மேற்கொண்டுள்ளார்.

அவற்றில் முறையே பெருங்கதை, சீவக சிந்தாமணி, சூளாமணி என்ற தலைப்பில் மூன்று காப்பியங்களின் காப்பியத் தன்மையாக மூன்று காப்பியங்களும் காப்பியத் தொடக்கம் ஒன்றுபட்டு இருப்பதை குறிப்பிடுகின்றார். அதில் பெருங்கதை மட்டும் தனக்கு முன்னர் தோன்றிய சிலப்பதிகாரம் மணிமேகலையினைப் பின்பற்றி ஆசிரியப்பாவால் பாடப்பட்டுள்ளமையைக் குறிப்பிடுகின்றார். ஆனால் சீவக சிந்தாமணி என்ற நூல் தனக்கென்று ஒரு தனித்தன்மையைக் கொண்டு தனக்குப்பின் தோன்றக்கூடிய பெருங்காப்பியங்களுக்கும் பேரிலக்கணங்களுக்கும் வழிகாட்டியாக நின்று நிலவுவதை கூறுகிறார்.

மூன்று காப்பியங்களின் கதையையும், அக்கதையை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ச்சி பின்னலையும் து.சீனிச்சாமி குறிப்பிடும்போது கொங்குவேளிரும், திருத்தக்க தேவரும், தோலாமொழித்தேவரும் தங்களுக்கேற்ற முறையில் ஏதேனும் ஒரு கருத்திற்கு முதன்மை கொடுத்து அதற்கு ஏற்ப கதை நிகழ்ச்சிகளை சித்தரித்துள்ளனர் என்றும், மூன்று காப்பியங்களுமே துறவு மேற்கொள்ளல் என்பதே இறுதி விளைவாக அமைந்துள்ளதைக் கூறுகிறார்.

காப்பியக் கட்டமைப்புக் கூறுகள் என்ற பார்வையில் வாழ்த்து, அவையடக்கம், வருணனைத் தொடக்கம், போதனை, கூடிப்பிரிதல், காதல் சாகசங்கள், சுயம்வரம், அருஞ்செயல் போன்ற பகுதிகள் ஒரு காப்பியத்தின் புதுமையான கூறுகளிலிருந்து சிந்தாமணியில் மேற்கண்ட எட்டு நிகழ்வுகளும் சிறப்புக் கூறுகளாக காணப்படுகிறது என்கின்றார்.

பாத்திரப் படைப்பும் நாடகப் பண்பும் பற்றிக் கூறுகையில் சீவகன் படைப்பிற்கான சிறப்பினையும் ஒரு காப்பியத் தலைவனாக அவன் கொண்டுள்ள உயர்ந்த பண்பு நலன்களைக் கூறி உலகிலேயே அவனுக்கு ஒப்பாக ஒருவரும் இல்லை என திருத்தக்கதேவர் கூறுவதாக கூறுகின்றார். மேலும் நாடகப் பண்பு நிறைந்த தன்மையில் சிந்தாமணி விளங்குகின்றது என்றும் அதில் குறிப்பாக விசையை சீவகன் சந்திப்பு நிகழ்வினைக் கூறும்போது திருத்தக்கதேவர் அடுத்தடுத்த பாடல்களில் உரையாடலை தொடர்ச்சியாக அமைத்து இருக்கின்றார் என்றும் கூறுகின்ற போது,

> *"ஒரு தாயின் அரற்றலுக்கேற்ப ஓலமிட்டுத் தழுவிக் கொள்கிறாள். இவ்வாறு தழுவிக்கொண்டு மகனைக் காணும் சூழலை ஓரளவு நாடகப் படுத்தியிருக்கும் காட்சியை காணலாம். ஆயினும் கூட இதில் கவித்துவப் பாங்கே மிகுந்திருப்பதை அறிந்து கொள்ளலாம்." (பக். 321, தமிழில் காப்பியக் கொள்கை)*

என்று கூறுகிறார். பிறந்தது முதல் பிரிந்திருந்த ஒரு தாய் மகனின் சந்திப்பைக் கூறுகின்றபோது உணர்ச்சியின் மற்றும் அன்பின் மேலீட்டால் தன் மார்பில் பால் பிலிற்ற மகனை மார்போடு தழுவும்போது அங்கே கவித்துவத்தை வைத்து திருத்தக்க தேவர் அதனூடாகவே உணர்ச்சியை ஒருங்கே வைத்து இருப்பதை அறியலாம். அதைவிட மேலாக தான் ஒரு மகனுக்குத் தாய் என்பதைவிட விசயை ஒரு நாட்டை ஆளுந்தன்மையுள்ள அரசனான சீவகனின் தாய் என்பதை கருத்தில் கொண்டு அவளுக்கான கடமையை அங்கு வைக்கின்றார் திருத்தக்கதேவர். இதனை கவித்துவம் மிகுந்து இருக்கிறது உணர்ச்சி குறைந்திருக்கிறது என்று சிந்தாமணி கூறுகின்றது. சீனிச்சாமி அவர்களின் அடுத்த கூற்றே,

> *"அடுத்த நிலையிலேயே விசையை அரசியல் அறிவுரைகளை ஓர் அரச குருபோல சொல்லுகிறாள். அரச மரபின் முதன்மையை வலியுறுத்தும் கொள்கை அடிப்படையில் பாத்திரப்படைப்பிற்கு வந்துவிடுகிறது" (பக். 321. தமிழில் காப்பியக் கொள்கை: முதல் பகுதி)*

*என்று கூறுகிறார். எனவே திருத்தக்கதேவர் சீவக சிந்தாமணி என்ற காப்பியம் புனைவதன் நோக்கமாக அரசநெறிகளை முறையாகப் பின்பற்றாதவன் அரசனாகவே இருந்தாலும் அழிவு உறுதி என்று கூற காப்பியத்தின் முக்கியக் கூறாகக் கூடல் ஊடல் ஆகியவற்றை காப்பியத் தொடக்கத்திலேயே தொடர்ந்துக் கூறி இன்பம் துய்த்தலில் மீண்டும் மீண்டும் ஈடுபடத் தூண்டும் காமச்செயலால் கிடைக்கும் இன்பம் உண்மையான இன்பமல்ல; மாறாக, அதுவே துன்பத்திற்குக் காரணமாக இருக்கும் என்பதை காப்பியம் முழுதுமே உள்ளுறுத்துகின்றார்.*

*மு.வை. அரவிந்தன் 1964-களில் சீவக சிந்தாமணி ஒரு பெருங்காப்பியம் என்ற பொருண்மையில் அண்ணாமலை பல்கலைக்கழகத்திற்கு கட்டுரையினை சமர்ப்பித்து பரிசினைப் பெற்றார். பின்னர் அவ்வப்போது தொடர்ந்து அப்பொருண்மையிலேயே சில இதழ்களுக்கு கட்டுரை எழுதி ஏறத்தாழ 10 ஆண்டுகளில் வெளிவந்த கட்டுரைகளை 1975-'இலக்கிய வானில் சிந்தாமணி' நூலாக்கம் செய்து வெளியிட்டார். அந்நூலில் காப்பியப் பண்பு, இலக்கியச்சுவை, சிந்தாமணி குறித்ததுமான ஆராய்ச்சி, இறுதியாக சிந்தாமணிக்கு நச்சினார்க்கினியரின் உரைத்திறன் குறித்ததுமான நான்கு பொருண்மைகளில் ஏறத்தாழ இருபத்திரண்டு தலைப்புகளில் தனது ஆய்வினை நிகழ்த்தியுள்ளார். இவற்றில் சீவக சிந்தாமணியினைத் தமிழ் இலக்கிய உலகில் பேரிலக்கியமாகிய காப்பியங்களின் போக்கினை மாற்றியமைத்து புதுவழி கண்ட பெருமை இந்நூலுக்கு உண்டு என்றும், திருத்தக்கதேவர் வகுத்த பொதுமறையான வழியினை அவருக்குப் பின்பு வந்த பேரிலக்கியம் புனைந்த புலவர்கள் எல்லோரும் பின்பற்றியிருக்கின்றனர்.*

*திருத்தக்கதேவரை பின்பற்றியவர்கள் காப்பியம் பாடக்கூடிய பாவகையாக விருத்தப்பாவினைக் கைக்கொண்டார்கள். திருத்தக்கதேவருக்கு முன்பு காப்பியம் பாடிய இளங்கோவடிகளும், சீத்தலைச் சாத்தனாரும், கொங்குவேளிரும் ஆசிரியப்பாவினால் பாடியிருக்க முதலில் விருத்தப்பாவால் காப்பியம் பாடத் தொடங்கி அதற்கு அடித்தளமிட்டவர். அவரிலிருந்து தோலாமொழித்தேவரும், சேக்கிழாரும், கம்பரும் ஆகிய புலவர்கள் காப்பியத்தில் பாவகையிலும் காப்பியம் தொடங்கும் முறையிலும் கதையை திடீரென்று தொடங்காமல் வாழ்த்தில் தொடங்கி, நீர் வளங்களைப் பாடி, நாட்டின் பிற வளங்களையும் நகரத்தின் சிறப்புகளைப் பாடி, பின்னர் மன்னனின் வரலாறு பாடி பிறகு காப்பியத் தலைவனின் பிறப்பைப் பாடியுள்ளார். என்ற தன்மைகளை தனது ஆய்வின் தொடக்கத்தில் திருத்தக்கதேவர் காப்பியக் கவிகளுக்கு ஒரு புதுமுறையைக் கையாண்ட முன்னோடி என்று நிறுவியுள்ளார்.*

*'இலக்கிய வானில் சிந்தாமணி' என்ற நூலில் சிந்தாமணி பிற காப்பியங்களுக்கு வழிகாட்டியதையும், தலைமைப் பண்புள்ள காப்பியமாக விளங்குவதையும், காப்பியத்தில் எங்கு நோக்கினும் தமிழின் தன்மை வெளிப்படுவதையும், காப்பிய இலக்கணமும் சிந்தாமணியும் காப்பிய உலகம் போன்ற நூலின் சிறப்புகளையும் உரையின் மேன்மைகளையும் கூறிய மு.வை.அரவிந்தன் சீவக சிந்தாமணியைப் போற்றுவோர் ஒருபுறம் என்றால் இந்நூலில் குறைகளும் இருப்பதாக கூறுகின்றார். குறைபாடுகளை,*

- *விருத்தப்பாக்களால் ஓசை தடை படுவதாகவும்*
- *காவியத்தில் உயிரோட்டமும் உணர்ச்சியும் குறைந்து வந்துள்ளதாகவும்*
- *பெண்ணினத்தைப் பழித்து கூறுவதாகவும்*
- *சீவகன் பலவகையான மணங்களை செய்வது குறைபாடு உடையதாகவும்*
- *திருத்தக்க தேவர் சமண சமயத்தை உயர்த்தியும் பிற சமயங்களைப் புறக்கணிக்கிறார் என்றதுமான குறைபாடுகள் உண்டென்று சிலர் கூறியதாக அதற்கான பதிலையும் தான் முன்வைத்திருக்கிறார்.*

*விருத்தப்பாக்களில் ஓசை தடைபடுவதற்கான காரணங்களாக, சங்க காலத்திற்குப் பின்னர் தமிழ் யாப்பிலக்கணத்தில் ஏற்பட்ட மாறுதலின் காரணமாக வடமொழி விருத்தப் பாவகையும் தமிழ் மொழியின் யாப்புகளும் ஒன்றான காலத்தில் திருத்தக்கதேவர் காப்பியம் புனைந்திருக்கின்றார். அதனால் புதிதாக தோன்றிய யாப்பிலக்கணம் முழுமையான வடிவம் பெறாமையால் சிந்தாமணி பாடல்கள் சிலவற்றில் ஓசை தடைப்படுகின்றது. எனவே தேவரின் ஆற்றலில் குறை கூறுவது தவறு என்று குறிப்பிடுகிறார்.*

*சீவக சிந்தாமணியில் உணர்ச்சியும் உயிரோட்டமும் இன்றி சில பாடல்கள் இருப்பதற்கு காரணங்கள் பலபடக் கூறலாம் என்று திருத்தக்க தேவரின் காலத்தில் தமிழ்மொழி இலக்கண*

வரம்பில் இருந்து மாறத் தொடங்கி அதன் விளைவால் புதுவகை அமைப்புகள் வடிவம் பெற்றன. புதிய சொற்களும் தோன்றின. தோன்றிய சொற்கள் பிற்காலத்தில் வழக்கிழந்தன. எனவே அச்சொற்கள் இடம்பெற்றுள்ள பாடல்கள் பொருள் தெளிவற்று இருப்பதோடு விரைந்து கற்க புகுவோரை தடை செய்துவிடுகின்றன. நூலாசிரியரின் பரந்த நூல் புலமையால் அறிவு சுமையை ஏற்று வெளிவரும் எந்த கலையும் உணர்ச்சியோடு பிறப்பதில்லை.

சீவக சிந்தாமணியில் பெண்ணின் பெருமை கூறாமை அதன் குறை என்றும், குறிப்பாக பெண்ணினத்தை தாழ்வுபடுத்திக் கூறியுள்ளார் என்று உரைப்பவர்களுக்கு பதிலுரையாக,

"பெண்ணெனப் படுவகேண்மோ பீடில பிறப்பு நோக்கா
உண்ணிறை உடைய அல்ல ஓராயிரம் மனத்த வாகும்" (சீவக. 1596:1-2)

என்று தொடங்கும் பாடலை மட்டுமே கொண்டு குறை கூறுவர். ஆனால் சீவகன் காட்டில் பவதத்தனிடம் பெண்களின் மூன்று வகை இருப்பதனை கூறி, அதில் உம்முடைய மனைவி எத்தகையவள் என்று வினவுவதாக திருத்தக்கதேவர் அமைத்திருப்பார். ஆகவே ஒரு நிகழ்வு நடைபெறும்போது அதனை மட்டுமே கொண்டு முடிந்த முடிவுக்கு வந்து விடக்கூடாது. அதற்கு முன்பும் பின்புமான நிகழ்வுகளை கொண்டே அந்நிகழ்வு பற்றிய முடிவுக்கு வருவதே சரியானதாகும். அவ்வாறில்லை எனில் இங்கு திருத்தக்கதேவர் பெண்ணினத்தை இழிவாகக் கூறியுள்ளார் அதனால் சிந்தாமணியே பெண்களுக்கு எதிரான காப்பியம் என்று உரைப்பது போலாகும்.

சிந்தாமணியில் உள்ள மற்றொரு குறைபாடாக இந்நூல் தம் சமயத்தையே போற்றுகிறது என்பதாகும். உண்மையில் சிந்தாமணி சமண சமயம் சார்ந்த அருமை பெருமைகளை போற்றியுரைக்கின்றது. தம் சமயக் கொள்கைகளை நன்கு எடுத்துரைக்கிறது. எனினும் வைதிக சமயத்திற்குரிய கதை, தெய்வம், வரலாறு, கொள்கை, பழக்கவழக்கம் போன்றவற்றை திருத்தக்கதேவர் பல இடங்களில் அமைத்து சிறப்பித்துள்ளார். அங்கு திருமால், சிவன், முருகன் போன்ற தெய்வங்களைக் கூறி ஒரு சமயப் பொதுமையினைக் கூறியிருக்கின்றார் என்பது உண்மையாகும்.

காப்பியத் தலைவனாகிய சீவகன் எட்டு வகையான மகளிரைத் திருமணம் செய்து கொள்கின்றான் என்பதனைக் கூறி 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற உயர்ந்த நெறியினை திருத்தக்கதேவர் புறக்கணித்து இருப்பதாக கூறுவதற்கு இதிகாச புராண நிகழ்வுகளையும் விசயநகர அரசனின் வரலாறுகளையும் எடுத்துக் கூறி இதிலெல்லாம் குறை காணாதவர்கள் சிந்தாமணி காப்பியத்தில் மட்டும் குறை இருப்பதை காண்கின்றனர் என்று மு.வை.அரவிந்தன் கூறுகின்றார். ஆனால் சீவகன் எட்டு விதமான பெண்களை திருமணம் செய்வதாக திருத்தக்கதேவர் வைத்திருப்பதற்கு காரணம் ஒரு காப்பிய தலைவன் தன் வாழ்வில் மிக நீண்ட பயணத்தை மேற்கொண்டு பல்வேறு பண்பாடுகளை காண்பதோடு மட்டுமல்லாமல் அவர்களுள் ஒருவராக வாழ்வதற்காகவும், அதன் மூலம் சீவகன் தன் வலிமையைப் பெருக்கவும், அதனூடாக பலவகையில் அவனின் வீரத்தையும் கலையையும் திறனையும் வெளிக்காட்டுவதற்காகவும் தான் வித்யாதரப் பெண்ணையும், வணிகர்களின் பெண்களையும், அரசர்களின் பெண்களையும் கொண்டு பல மணங்களைச் செய்கிறார். மேலும் அதன் மூலம் சிற்றின்பங்களில் மூழ்கிவிடாமல் அடுத்து அவனை குறிக்கோளினை நோக்கி பயணிக்க வைப்பதற்காகவே இக்காப்பியத்தில் திருத்தக்கதேவர் சீவகனுக்கு பல மணங்களை செய்து வைக்கிறார்.

சிந்தாமணி குறித்து நடந்த ஆய்வுகள் பெரும்பாலும் காப்பியத்தின் கவித்திறன், பாத்திரப்படைப்பு, கதை நலன் என்று புகழ்ந்துரைப்பதனிடையில் அந்நூல் பற்றிய சமூகத்தில் வளம்வளரும் குறைகளையும் எடுத்தாய்ந்து அதற்கான விளக்கத்தையும் எடுத்துரைக்கின்ற வகையில் மு.வை.அரவிந்தன் தன் ஆய்வினை நகர்த்தியுள்ளார்.

சீவக சிந்தாமணி குறித்த ஆய்வு என்பதைவிட காப்பியங்கள் குறித்து நடந்த ஆய்வுகளில் இன்றியமையாத ஆய்வினை மேற்கொண்ட எஸ்.வையாபுரிப்பிள்ளை தனது இலக்கிய சரிதத்தில் 'காவிய காலம்' என்ற நூலில் சிந்தாமணியின் காலம் குறித்தும் சிந்தாமணிக்கு முதல் நூல் பற்றியும் சிந்தாமணியில் பண்டைய நூல் தாக்கம் பற்றியும் சிந்தாமணியை எடுத்தாண்ட கவிஞர்கள் குறித்தும் சிந்தாமணியின் செய்யுள்களின் நயங்கள் குறித்தும் அதன் பார்வை குறித்தும் கூறிய பின்பு இறுதியில் சிந்தாமணியில் சில குறைபாடுகள் என்ற பகுதியில்,

- கதையின் அமைப்பு முறை
- ஒருங்கிணைந்த பார்வையின்மை

- பாத்திர சிருஷ்டிக் குறை
- பல மணங்கள்
- கண்டிக்கத்தக்க அகப்பொருட் செய்திகள்
- நெஞ்சை அள்ளும் போக்கு இன்மை

காப்பியத்தின் கதை அமைப்பில் ஒரு தலைவனை எடுத்துக்கொண்டு அவன் செயல்களை கால முறைப்படி ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக் கூறுதல் சரித்திர நெறிக்கு பொருந்தும். அந்தவகையில் கதாநாயகனின் நோக்கமாய் அமைந்த பெரும் செயலை எடுத்துக் கொண்டு அதன் தோற்றம், வளர்ச்சி, உச்சநிலை, முடிவு நிலை என்பனவற்றை அறுதியிட்டு கதையொருமை என்ற உணர்ச்சியை உண்டு பண்ணுகிற நெறியில் சிந்தாமணி குறைபாடுடையது என்கிறார்.

சிந்தாமணியின் கதையினைப் பொருத்தவரை தலைவன் பாத்திரப் படைப்பின் நோக்கத்தை கருதி அப்பாத்திரம் விரைந்து பயணித்துக் கொண்டே இருக்கும் இங்கு சீவகனின் பாத்திரப்படைப்பு கதையில் நாம் புரிந்துகொள்ள,

> *"உலகியலில் கிடைக்கும் வெற்றி உலகியலிலிருந்து விடுபடல் என்ற இரண்டையும் இணைவு செய்து பார்க்காவிட்டால் சீவக சிந்தாமணி என்ற காப்பிய வடிவின் முழுமை கிடைக்காமல் போய்விடும்" (பக். 262 : தமிழில் காப்பியக் கொள்கை)*

என்ற கருத்தியலின் அடிப்படையிலும் சிந்தாமணியில் சமயம் சார்ந்த கருத்துக்களும் கூட இறுதி இலம்பகத்தில்தான் மிகுந்துள்ளது. ஏனெனில், சமயஞ் சார்ந்த கருத்துக்கள் காப்பியத்தில் இடையிடையில் இடம் பெற்றால்கூட காவிய நுகர்ச்சிக்கும் கதையோட்டத்திற்கும் தடை ஏற்படும் எனலாம். அவ்வாறான நிகழ்வுகள் இக்காப்பியத்தில் ஏதும் இடம் பெறவில்லை எனலாம்.

சீவக சிந்தாமணியில் ஒருங்கிணந்த பார்வையில்லை என்ற தன்மைக்குக் காரணங்களாக எஸ். வையாபுரிப்பிள்ளை கூறும்போது,

> *"தனிப்பட்ட செய்யுளின் அழகும் இனிமையும் இந்த உணர்ச்சியைத்தான் மிகுவிக்கின்றன. இதனால் ஆசிரியரின் கவித்துவத்தில் முக்கியமானதோர் குறைபாடு நமக்குப் புலனாகின்றது." (பக்.154 : தமிழ் இலக்கிய சரிதத்தில் காவிய காலம்)*

என்று குறிப்பிட்டு அதாவது இலை, தழை முதலியன மிகுந்து மரத்தை மறைத்து விடுவது போல என்று தனிப்பட்ட செய்யுள்களின் அழகும் இனிமையும் ஒட்டுமொத்த கதையைத் தன் மனக்கண்முன் நிறுத்தி அதன் அழகியலை உரிய பாவனா சத்தியோடு எடுத்திரைக்கும் பாங்கு திருத்தக்கதேவருக்கு இல்லை என்று பொதுப்பட உரைப்பது என்பது ஏற்புடையதல்ல. ஏனெனில் புலவர்களும் ஆய்வாளரும் கூறுவது போல சீவக சிந்தாமணியை எங்கு தொட்டாலும் அதன் கவித்திறத்தை உணரமுடியும். தனிப்பாடல்களின் அழகும் இனிமையும்தான் ஒட்டுமொத்த காப்பியத்தின் கவித்திறனை மிகுவிக்கும் காப்பியத்தில் ஒவ்வொரு இலம்பகத்திற்கும் ஏன் ஒவ்வொரு செய்யுளுக்கும் தொடர்புபடுத்தி உருவாக்கியிருப்பதே திருத்தக்க தேவரின் சிறப்புகளுள் ஒன்றாக அமைகிறது.

பாத்திரங்களை உருவாக்குவதில் சிந்தாமணியில் குறையிருப்பதாகக் எஸ். வையாபுரிப்பிள்ளை கூறுகையில்,

> *"சீவகன் உட்பட்ட பாத்திரமேனும் உளநூல் தத்துவங்களைப் பின்பற்றி அமைந்தனவல்ல. எனவே நம்மை வசீகரித்து இன்புறுத்தும் ஆற்றல் இக்காப்பியத்தில் வரும் பாத்திரங்களுக்கு இல்லை. (பக்.154. தமிழ் இலக்கிய சரிதத்தில் காவிய காலம்)*

திருத்தக்க தேவரின் படைப்பில் சீவகன் உட்பட்ட ஒரு பாத்திரமேனும் உளநூல் தத்துவப்படி கற்போரின் மனதில் நிற்கவில்லை என்கிறார். இக்கூற்றிற்கு திருத்தக்கதேவரின் படைப்பில் ஒரு போர்வீரன் மாத்திரமே போதுமானவன்.

> "வென்று இயங்கு ஒளிரும் வெள்வேல் மின் என வெகுண்டு விட்டான்
> சென்ற வேல் விழுந்து செம் கண் மறவன் நக்கு எதிர் கொண்டோளே"
>
> *(சீவக. 2289: 3-4)*

*வீரன் தன் மேல் வந்த வேலாகிய விருந்தை மகிழ்ந்து எதிர்கொண்டு தன் மார்பை அதற்கு உணவாகத் தந்தான். என்று கூறியிருக்கின்ற நிகழ்வே நம் மனதில் ஒரு போர்வீரனின் மறத்தன்மையும் அவனின் அறத்தில் ஒன்றாகிய விருந்தோம்பல் பண்பினையும் திருத்தக்கதேவரின் பாடல்கள் எடுத்துரைக்கின்றன, சிந்தாமணியில் பல மணங்கள் மற்றும் கண்டிக்கத் தக்க அகப்பொருள், நெஞ்சையள்ளும் போக்கு இன்மை குறித்தும் முன்னரே எடுத்துரைத்ததனால் அவற்றைப் பற்றி இங்கு விவரிக்க வேண்டியதில்லை.*

*சிந்தாமணி குறித்த குறைபாடுகளைக் கூறும் போது மு.வை. அரவிந்தன் மற்றும் எஸ். வையாபுரிப்பிள்ளை போன்ற இருவரின் கூற்றிலும் தற்காலத்துள்ள இலக்கிய மதிப்பாளர்கள் இப்பெருங்காவியத்தில் சில குறைபாடுகள் காணுவர் பொதுப்படக் கூறியிருப்பதுவும் இங்கு கவனிக்கத்தக்கது. மேலும் எஸ். வையாபுரிப்பிள்ளையின் ஆய்வு நடையே தனித்திறன் பெற்றதாகும். எவ்வாறெனின் ஒரு கருத்தை முன் வைக்க நினைக்கும்போது அவர் பல தரவுகளை அடுத்தடுத்து அடுக்கிக்கொண்டே போவார். ஆனால் சிந்தாமணி குறித்த குறைகளைக் கூறுமிடத்து அவர் பொதுவாகச் சொல்லிக்கொண்டே செல்வதிருந்து நமக்கு அவரின் மனதின் தன்மையை புரிந்து கொள்ள முடிகிறது.*

*ஆய்வுகளும் மாற்று வடிவங்களும்*

*பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டளவில் ஏற்பட்ட இலக்கியப் பரவலாக்கத்திற்குக் காரணம் அச்சு ஊடகத்தின் வரவே காரணமாக அமைந்தது. தமிழகத்தில் மக்களுக்கு பழந்தமிழ் நூல்களினைப் பொருள் புரிந்து கொள்வதில் உள்ள இடையூறுகளைக் களையவும் மூலநூலின் மீதுள்ள புலைமையாலும் ஈடுபாட்டாலும் அவை பல பரிமாணங்களை அடைந்தன. அந்தவகையில் ஏறத்தாழ எழுபது கட்டுரைகளும், இந்நூலின் தனித்தனி நிகழ்வுகளைக் கூறும் கதைகளாகவும், ஒட்டு மொத்தக் காப்பியத்தின் கதைச் சுருக்கமாகவும், ஒலி, ஒளி நாடகங்களாகவும், ஓவியங்களாகவும், எளிய சொற்களைக் கொண்ட மரபுக் கவிதைகளாகவும், சிற்றிலக்கியப் பாடல்களாகவும் மூலநூலினைக் கருவாகக் கொண்டும் மாற்று வடிவங்களில் வெளிவந்துள்ளன.*

*பழந்தமிழ் இலக்கியங்கள் அச்சு ஊடகத்தின் வரவால் தமிழ் நிலத்தில் பரவலாக்கம் பெற்றன. அந்த வகையில் சீவக சிந்தாமணி மூலமும் உரையையும் தாண்டி கதைகளாகவோ, நாடகமாகவோ, உரைநடையாகவோ பல மாற்று வடிவங்களில் வெளிவருகின்ற போது தொடக்க நிலை வாசகர் முதல் கல்வி கற்ற சான்றோர்கள் வரையிலும் எளிமையாகச் சென்று சேர்ந்திருக்கின்றன.*

*முடிவாக, சீவக சிந்தாமணிக் குறித்தான ஆய்வு நூல்களில் சிந்தாமணியின் சிறப்புகள் குறித்து சில ஆய்வுகள் நடந்திருக்கின்றது அதிலும் குறைகளை எடுத்துரைக்கத் தயங்காமல் பொதுவானக் கண்ணோட்டத்தில் எடுத்துரைத்திருக்கின்றனர். அவற்றில் இக்கட்டுரை சீவக சிந்தாமணி குறித்து நிகழ்த்தப்பட்ட ஆய்வுகளை எடுத்துக் கூறுவதில் இது தொடக்க நிலையில் வைக்கக் கூடியதாக அமைந்திருக்கிறது.*

*துணை நூல்கள்*


1. *திருத்தக்க தேவர் (உ. வே. சா.) - சீவக சிந்தாமணி, மு.ப. 1887*
2. *அரவிந்தன், மு. வை. - இலக்கிய வானில் சிந்தாமணி, மு. ப. 1975*
3. *சீனிச்சாமி, து. - தமிழில் காப்பியக் கொள்கை, மு. ப. 1985*
4. *வையாபுரிப்பிள்ளை, எஸ். - தமிழ் இலக்கிய சரிதத்தில் காவிய காலம், ப. 2010*


********* ********* ********** ********* ********* ********** ********** **********